SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை - யூலை 2017

**(July 2017 Examination - AA3 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA34**

# செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (PCA)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

## இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA3 பரீட்சை – யூலை 2017

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா 1ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) (a) வியாபாரத்தின் ஆரம்பக் கட்டத்தில் சிறிதாகவும் தக்கவைக்ககூடியதாகவும் இருப்பதே கொள்கையாகும்.

(b) இரவது வியாபாரம் பெரிதாக விஸ்தரிக்கப்பட்டதும், தக்கவைப்பது மட்டும் கொள்கையல்லாது இலாபம் உழைப்பது, இலாபத்தை அதிகரிப்பது மற்றும் காசுப்பாய்ச்சல், வியாபார வளர்ச்சி மற்றும் சந்தை வாய்ப்பு அதிகரிக்கும்.

**(02 புள்ளிகள்)**

(B) i. சமூகத்தில் கல்வி நிலை

ii. வயதானவர்களின் சனத்தொகை அதிகரித்துள்ளது

iii. மதப் பின்னணி

iv. வாழ்க்கைப்பாணி

v. மதிப்பு, வாடிக்கையாளர்கள் நம்பிக்கைகள் மற்றும் நடத்தைகள், குடும்பம் மற்றும் சமூகங்கள்.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

### வினா 2ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) i. இடர் தவிர்ப்பு

ii. இடர் ஏற்பு

iii. இடர் மாற்றல்

iv. இடர் குறைப்பு

**(02 புள்ளிகள்)**

(B) i. செயற்பாடுகளைப் பல்வகைப்படுத்தல்

ii. இடர் பகிர்தல்

iii. வணிகத்தின் நிகழத்தக்க திட்டம்.

iv. செயற்பாடு இடருக்கான உள்ளகக் கட்டுப்பாடு **(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 3ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) தொழில்சார் சந்தேக மனப்பாங்கு உள்ளடக்குவது கேள்வியெழுப்பும் மனம், தவறுகள் அல்லது மோசடிகள் காரணமாக ஏற்படக்கூடிய வழுக்கூற்றுகள் காணப்படக்கூடிய நிலைமை தொடர்பான அவதானம் ஆகும். இது கணக்காய்வாளரை எதிர்கால நிலைமை தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டுகின்றது.

**(02 புள்ளிகள்)**

(B) i. பொருண்மைத்தன்மை மற்றும் கணக்காய்வு இடர்.

ii. கணக்காய்வு செயன்முறையின் இயல்பு, நேரத்தேர்வு, மற்றும் வீச்செல்லை.

iii. போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்று பெறப்பட்டுள்ளதா என்பதனை தீர்மானித்தல்.

iv. பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ளல்.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 4ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) 1. நிறுவனம் மற்றும் அதன் ஊழியர்கள் தொழில் சார் நியமங்கள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்ட மற்றும் ஒழுங்குப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இசைந்து போதல்.

2. நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கைகள் அல்லது பணிக்கமர்த்தல் பங்காளர்கள் என்பன சூழலுக்கு பொருத்தமாயிருத்தல். **(02 புள்ளிகள்)**

(B) 1. வேலையானது கணக்காய்வு நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

2. நிறைவேற்றப்பட்ட வேலை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் போதுமானவகையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

3. அனைத்து முக்கியமான கணக்காய்வு விடயங்களும் தீர்வு செய்யப்பட்டு கணக்காய்வு முடிவு செய்தலில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

4. கணக்காய்வு நடைமுறைகளின் நோக்கங்கள் அடையப்பட்டுள்ளது.

5. வெளிப்படுத்தப்பட்ட முடிவுகளானவை நிறைவேற்றப்பட்ட வேலையின் பெறுபேறுகளுடன் நிலைமாறாதுள்ளன. அத்துடன் கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படைக்கு ஆதரவாக உள்ளன. **(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**மூன்று (03) கட்டாய வினாக்கள்.**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா 5ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) உறுதிப்படுத்தல் ஈடுபாடு என்பது குறித்த பிரமாணங்களுக்கு எதிராக ஒரு அடிப்படை விடய மதிப்பீட்டின் பெறுபேறுகள் பற்றி பொறுப்பான பிரிவினரை விட குறித்த பயன்பாட்டாளர்களின் நம்பிக்கையின் அளவை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு அபிப்பிராயத்தை அல்லது இறுதித் தீர்மானத்தை பயிற்சியாளர் வெளிப்படுத்துவதற்கான ஒரு ஈடுபாடாகும்.

**(04 புள்ளிகள்)**

(B) (i) **நிதியியல் கணக்காய்வு (31.03.2017)** - இது ஆண்டு வெளிவாரி கணக்காய்வு ஆகும். ஆகையால் இவ்வகையான ஈடுபாடுகள் பொறுப்பு உத்தரவாத ஈடுபாடுகளாக கருதப்படும்.

(ii) **5 வருட நிதியியல் கணிப்பு மீதான நிதியியல் கணக்காய்வு** - இது வரையறுக்கப்பட்ட உத்தரவாத ஈடுபாடு ஆகும். ஏனெனில் உத்தரவாத தொழில் பயிலுநர் வரையறுககப்பட்ட ஸ்வர்னா செரமிக் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட நிதியியல் கணிப்பு அறிக்கையை கேட்பார்.

(iii) **நிதியியல் தகவல் அல்லாதது** - முக்கிய செயல்திறன் காட்டிகள் மீது உத்தரவாதம் நிதியில்லா நிலைமைகள் செயல்திறன், வரையறுக்கப்பட்ட உத்தரவாத ஈடுபாடு பற்றி ஸ்வர்னா செரமிக் நிறுவனத்தினால் அறிக்கையிடப்பட்டது.

**(06 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 6ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

A. i. கணக்காய்வு சான்றானது உரிமத்திற்கு வெளியே சுயாதீனமான மூலங்களிலிருந்து பெறும் போது அது மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்ததாக அமையும்.

ii. உரிமத்தால் ஈடுபடுத்திய தொடர்பான கட்டுப்பாடுகள் விளைதிறனாக இருக்கும் பட்சத்தில் நிறுவனத்திற்குள்ளேயே உருவாக்கப்பட்ட கணக்காய்வு சான்றாக மிகவும் நம்பகத்தன்மையானவையாகும்.

iii. கணக்காய்வாளரால் நேரடியாகப் பெற்றுக்கொண்ட சான்று மிக நம்பகத்தன்மையானதாகும்.

iv. கடதாசி, மின்னியல் மற்றும் ஏனைய ஊடகம் என்பவற்றினாலான ஆவணப்படுத்தப்பட்ட சான்று மிகவும் நம்பகரமானதாகும்.

v. நிழற்பட பிரதிகள் அல்லது தொலை நகல்கள் என்பவற்றை விட மூலப்பிரதி ஆவணங்கள் மிகவும் நம்பகத்தன்மையானதாகும்.

**(04 புள்ளிகள்)**

B.

i. **விசாரணை** - வரையறுக்கப்பட்ட ஏபி நிறுவனம் மற்றும் குறிப்பிட்ட குத்தகை நிறுவனம் ஆகியவற்றில் இருந்து, முறையாக அல்லது முறைசாரா முறையில் பதில் கிடைப்பது இதில் அடங்கும்.

ii. **பரிசோதனை** - விதிமுறைகள் மற்றும் மீள்கொடுப்பனவு விபரங்களை உறுதிப்படுத்துவதற்கான குத்தகை உடன்படிக்கை ஆண்டுக்கான பணம் தொடர்பான வங்கி அறிக்கை.

iii. **மீள் கணிப்பீடு** - வட்டி கொடுப்பனவு மீள்மதிப்பீடு மற்றும் தவணைக் கொடுப்பனவு துல்லியத்தை சரிபார்த்தல்.

iv. **வெளிமூல உறுதிப்பாடு** - குத்தகை நிறுவனத்தில் இருந்து நேரடி எழுத்துபூர்வ உறுதிப்படுத்தல் பெறுதல்.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 7ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

A. தொடர்புள்ள தரப்பினர் ஊடுசெயல்களை இனங்காண்பதற்கான பொறுப்பு முகாமையைச் சார்ந்ததாகும். அவ்வாறான ஊடுசெயல்கள் உடனடியாக கொடுப்பனவுப் பெறுவனவு அல்லாதாகையால், அவை முறையாக அங்கீகரிகப்படல் வேண்டும். தொடர்புற்ற தரப்பினர் ஊடுசெயல்களின் வெளிப்படுத்தலுக்கான பொறுப்பு முகாமைக்குரியதாகும்.

**(03 புள்ளிகள்)**

B.

1. முகாமை மற்றும் இயக்குநர்களை விசாரித்தல்- உரிமத்திற்கு பிரயோகிக்கத்தக்க வெளிப்படுத்தற் தேவைப்பாடுகளுக்கு அமைவாக வெளிப்படுத்த வேண்டிய தொடர்புற்ற தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல் நடைபெற்றுள்ளனவா என்பன பற்றி முகாமை மற்றும் இயக்குநர்களை விசாரித்தல்.
2. பெயரிடப்பட்ட தொடர்புற்ற தரப்பினர்களுக்கான முந்திய ஆண்டு செய்கைத்தாள்களை மீளாய்வு செய்தல்.
3. பங்குதாரர்கள் மற்றும் இயக்குநர்கள் ஆகியோரின் கூட்ட அறிக்கைகள் மற்றும் இயக்குநர்களின் உரித்துக்கள் பதிவேடு போன்ற ஏனைய பொருத்தமான சட்டரீதியான பதிவேடுகள் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
4. நிதியாண்டு இறுதியில் அல்லது நிதியாண்டில் அல்லது நிதியாண்டு இறுதிக்கு அண்மியதாக அறிமுகப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மீதிகள் அல்லது வழக்கத்திற்கு மாறான கொடுக்கல்வாங்கல் அல்லது பெரிய கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றிற்காக கணக்கீட்டுப் பதிவேடுகளை மீளாய்வு செய்தல்.
5. கடன் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு உறுதிப்படுத்தல்கள் மற்றும் வங்கிகளிடமிருந்தான உறுதிப்படுத்தல்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல். அவ்வாறான மீளாய்வு உரிமத்தின் பிணை பொறுப்புறுதியாளரின் உறவினை குறிப்பிடுவதாக அமையும்.

6. முதலீட்டுக் கொடுக்கல்வாங்கல்களை மீளாய்வு செய்தல் உதாரணமாக ஒரு கூட்டு முயற்சி அல்லது ஏனைய உரிமத்தின் ஒரு உரிமையை கொள்வனவு அல்லது விற்பனை செய்தல்.

7. ஊழியர்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்ட அனைத்து ஓய்வூதியம் மற்றும் நம்பிக்கைப்பொறுப்பு நிதிகள் மற்றும் அவர்களின் முகாமைத்துவம் மற்றும் நம்பிக்கைப்பொறுப்பாளர் என்பன பற்றிய விசாரணைகள்.

8. ஏனைய உரிமங்களுடன் இணைக்கப்பட்டுள்ள இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள் பற்றிய விசாரணை.

9. பிரதான பங்குதாரர்களின் பெயர்களை நிர்ணயிப்பதற்கு பங்குகளில் உரிமைப் பதிவேடுகளை மீளாய்வு செய்தல்.

10. மேலதிக தொடர்புற்ற தரப்பினர் பற்றிய அறிவைப் பெறும் நோக்கத்திற்காக நடைமுறையில் கணக்காய்வில் ஈடுபட்டுள்ள ஏனைய கணக்காய்வாளரை அல்லது முன்னைய கணக்காய்வாளர் என்போரை விசாரித்தல்.

11. உரிமத்தின் வரி அறிக்கை, நிதிச்சட்டத்தின் கீழான அறிக்கைகள் மற்றும் தொடர்புற்ற தரப்பினர் இருப்பு பற்றிய சான்றுகளை வழங்குவதற்கான ஒழுங்குபடுத்தும் முகவர்களால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல்.

12. தொடர்புற்ற தரப்பினரின் இருப்பு மற்றும் தொடர்புற்ற தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றை சுட்டிக்காட்டுவதற்கான சட்டத்தரணிகளிடமிருந்தான கடிதங்கள் மற்றும் விற்பனைப் பட்டியல்களை மீளாய்வு செய்தல்.

**(05 புள்ளிகள்)**

C. எல்லா தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களும் கட்டாயமாக வரையறுக்கப்பட்ட கிறீன் நிதியியல் கூற்றில் கட்டாயமாக வெளிப்படுத்தல் வேண்டும்.

எழுத்து மூல பிரதிநிதித்துவத்தில் கீழ் உள்ள குறிப்புகள் குறிக்கப்பட வேண்டும்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**இரண்டு (02) கட்டாய வினாக்கள்.**
**(மொத்தம் 50 புள்ளிகள்)**

## வினா 8ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) (a).

1. திகதி
2. வேலை இல
3. கிரய நிலையம்
4. பொருள் விபரம்
5. தேவையான பொரும்
6. வழங்கப்பட்ட பொருள்
7. களஞ்சிய காப்பாளர் கையொப்பம்
8. பொருள் மதிப்பு
9. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பம்
10. பொருள் கோரும் அதிகாரி கையொப்பம்

**(03 புள்ளிகள்)**

(b).

i. உற்பத்தி கட்டளையை தெரிவு செய்தல் மற்றும் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட கட்டளையுடன் ஒப்பீட்டு பார்த்தல்.

ii. பொருள் கோரிக்கை குறிப்பினை தெரிவுசெய்தல் மற்றும் அவற்றை உற்பத்திக் கட்டளையுடன் ஒப்பிட்டு பார்த்தல்.

iii. பொருள் கோரிக்கை குறிப்பினை பொருள் வழங்கப்பட்ட குறிப்புடன் ஒப்பிட்டுப்பார்த்தல்.

iv. பொருள் வழங்கப்பட்ட குறிப்பினை தெரிந்து வாடிக்கையாளர் கட்டளை, பொருள் வழங்கப்பட்ட குறிப்பு விற்பனைப் பட்டியலுடன் ஒப்பீட்டு பார்த்தல்.

v. பொருள் வழங்கப்பட்ட குறிப்பினை தெரிந்து மற்றும் விற்பனை பிரிவு ஏதேனும் விலக்கு குறிப்பு உள்ளதா என்பதை பரிசோதித்தல். விலக்கு குறிப்பிடப்பட்டிருப்பின் அதை ஆராய வேண்டும்.

**(05 புள்ளிகள்)**

(c).

i. முகாமைத்துவம், உள்ளக கணக்காய்வு செயல்களுக்கு உட்பட்ட நபர்கள் மற்றும் பிற உரிமங்களில் உள்ளவர்களை விசாரித்தல்.

ii. பகுப்பாய்வு நடவடிக்கைகளை நடத்துதல்.

iii. உரிமத்தினை அவதானித்தலும் ஆய்வு செய்தலும்

iv. உரிமம் மேற்கொண்ட பிற ஈடுபாடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்

v. வாடிக்கையாளர் ஏற்பு அல்லது தொடர்ச்சியான செயன்முறை

vi. கடந்தகால வேலைக் கோப்புரைகளை பரிசோதனை செய்தல்.

vii. வெளிவாரியான மூலங்களில் பெறப்பட்ட தகவல்களை மீளாய்வு செய்தல்.

viii. நிறுவனத்தின் நிதியியல் வெளியீடுகளை மீளாய்வு செய்தல்.

**(03 புள்ளிகள்)**

(d).

1. **முழுமைத்தன்மை** - பதிவு செய்யப்பட வேண்டிய எல்லா கொடுக்கல் வாங்கல்களும் மற்றும் நிகழ்வுகளும் டேஸ்ற் கம்பனியில் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கும்.
2. **துல்லியத்தன்மை** - பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களும் மற்றும் நிகழ்வுகள் சம்பந்தமாக ஏனைய தரவுகள் மற்றும் தொகைகள் சரியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.
3. **இடம்பெறுதல்** - டேஸ்ற் கம்பனி சம்பந்தமாக பதிவுசெய்யப்பட்ட நிகழ்வுகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.
4. **வெட்டுக் குறுக்கல்** - சரியான கணக்கீட்டு காலப்பகுதியில் கொடுக்கல் வாங்கல்களும் மற்றும் நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.
5. **வகைப்படுத்தல்** - சரியான கணக்குகளில் கொடுக்கல் வாங்கல்களும் மற்றும் நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

SRI LANKA

(B)

| | பொதுக்கட்டுப்பாடுகள் | உதாரணங்கள் |
|---|---|---|
| a | கணணி பிரயோகத்தின் அபிவிருத்தி | ▪ முறைமை வடிவமைப்பின் மீதான நியமங்கள், நிகழ்ச்சிப்படுத்தல், மற்றும் ஆவணப்படுத்தல்.<br>▪ கணணிப்பயன்பாட்டாளர்களாலும் முகாமையினராலும் அங்கீகாரம்.<br>▪ வடிவமைத்தலுக்கு பொறுப்பானவர்கள் பரிசோதனைக்கும் பொறுப்பானவர்கள் அல்லர் என்றவாறு கடமைகளைப் பாகுப்படுத்தல்.<br>▪ புதிய நடைமுறைகளில் ஊழியர்களை பயிற்றுவித்தல் மற்றும் போதுமான ஆவணப்படுத்தலின் கிடைப்புத்தன்மை. |

| | | |
|---|---|---|
| b | தரவு கோவைகளில் அங்கீகாரமற்ற திருத்தங்களை தடுத்தலுக்கான கட்டுப்பாடுகள் | ▪ தொலை முனையங்களின் மீது பௌதீகப் பாதுகாப்பு<br>▪ அங்கீகரிக்கப்பட்ட ஆளணியர்களுக்கு மட்டும் தகவல்களை அணுகுவதற்கான அதிகாரத்தை வரையறைப்படுத்தல்.<br>▪ தடுப்புச்சுவர்கள்<br>▪ பயன்பாட்டாளர்களை இனங்காணும் கட்டுப்பாடுகள் கடவுச்சொல் போன்றன.<br>▪ தரவு மறையாக்கம். |
| c | செயற்பாட்டின் தொடர்ந்தியற்கும் தனமையை உறுதிப்படுத்தலுக்கான கட்டுப்பாடுகள். | ▪ நிகழ்ச்சி நிரல்களின் மேலதிகப்பிரதிகள் மற்றும் வேறு இடங்களில் தகவல் கோவைகளை மேலதிகமாக வைத்திருத்தல்.<br>▪ தீ மற்றும் ஆபத்துக்கள் என்பவற்றிற்கு எதிராக உபகரணங்களை பாதுகாத்தல்.<br>▪ பாதுகாப்பு சக்தி வளங்கள்.<br>▪ இயற்கை அநர்த்தங்கள் மீட்சி நடைமுறைகள் தரவுக்காப்பு வசதிகளின் கிடைப்புத்தன்மை.<br>▪ உடன்படிக்கைகள் மற்றும் காப்புறுதி என்பவற்றைப் பேணல். |
| d | நிகழ்ச்சிநிரலில் அங்கீகாரமற்ற மாற்றங்களைத் தவிர்த்தல் அல்லது கண்டுபிடிப்புகள். | ▪ கடமைகளைப் பாகுபடுத்தல்.<br>▪ கடவுச்சொல் பாதுகாப்பு<br>▪ பூட்டப்பட்ட கதவுகள் மற்றும் விசைப்பலகைகள் மூலம் அணுகுவதில் மத்திய கணணிக்கு இறுக்கத்தை ஏற்படுத்தல்.<br>▪ மென்பொருள் மீதான கணணி நச்சுநிரல் பரிசோதனை.<br>▪ எடுக்கப்படுகின்ற நிரல்களின் காப்பு பிரதிகள் மற்றும் அவற்றை வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தல். |

**(08 புள்ளிகள்)**

**(25 புள்ளிகள்)**

## வினா 9ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A)

a)

1. மாதிரி சொத்துக்களை சரிபார்த்தல்.
2. முந்தைய ஆண்டினது நிதியியல் நிலைமை கணக்காய்வு கூற்றினைப் பெறுதல் மற்றும் ஆரம்ப மீதிகள் சரியாக முன்கொண்டுவரப்பட்டிருக்கின்றதா என சரிபார்த்தல்.

3. கையகப்படுத்தல்கள் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்கு சரியான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றதா என பார்ப்பதற்கு இயக்குனர்சபை கூட்ட அறிக்கையை சரிபார்த்தல்.
4. சொத்துக்களின் கிரயத்தை சரிபார்ப்பதற்கு வழங்குனர் பொருள்விலைப்பட்டியலை பரிசோதித்தல்.
5. உரிமைகளை சரிபார்ப்பதற்கு ஆவணங்களை பரிசோதித்தல். உதாரணம் காணி-உறுதிப்பத்திரம்.
6. அனைத்து சொத்துக்களும் மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என பரிசோதித்தல்.

**(03 புள்ளிகள்)**

b) கட்டுப்பாட்டு சோதனையானது. ஆரம்ப மட்டத்தில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த தவறான கூற்றுக்களை தடுத்தல், கண்டுபிடித்தல், மற்றும் திருத்துதல் என்பவற்றின் செயற்பாடு விளைதிறன் பற்றி கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்வதற்காக நிறைவேற்றப்படுவதாகும். வலுவளிப்பு விதிமுறைகளாவன உறுதியான மட்டத்தில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த தவறான கூற்றுக்களைக் கண்டுபிடிப்பதற்காக நிறைவேற்றப்படும் கணக்காய்வு நடைமுறைகளாகும். இது கொடுக்கல் வாங்கல்கள் கணக்கு மீதிகள் மற்றும் வெளிப்படுத்தல்களில் கவனம் செலுத்துகிறது.

**(03 புள்ளிகள்)**

(B)

a)

1. LKAS 16 இன்படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயமாக அங்கீகரிக்கப்படும்.
2. இதன்படி, ரூபா 2,500,000 மூலதனமாகாது, ஆனால் இலாபம் சம்பாதிப்பதற்காக செலவிடப்படுகிறது. தேய்மானம் மீதான விளைவுகள் ஆண்டு இறுதிக்குள் மூலதனமாகக் கொண்டிருப்பதால் அத்தியாவசியமானதாக கருதப்படும்.
3. பொருளின் எண்ணிக்கை மற்றும் முகாமை பெரும்பாலும் கணக்கு புத்தகங்களை சரிசெய்ய தயாராக இல்லை என, கட்டடம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் அதன் நிதிஅறிக்கைபடி பொருள் தவறாக உள்ளது.
4. ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, நிதியியல் அறிக்கை மொத்தமாக பொருள் தவறாக முறையில் இருந்து விடுபடவில்லை, திருத்தப்பட்ட கருத்து தேவைப்படுகிறது.
தவறான பொருள் என்றாலும், அது நிதி அறிக்கைக்கு பரவலாக இல்லை என்று முடிவு செய்யலாம். எனவே தகுதி வாய்ந்த கருத்து தேவைப்படுகிறது.

**(06 புள்ளிகள்)**

b)

i. தலைப்பு
ii. பெறுநர்
iii. அறிமுகப்பந்தி
iv. நிதிக்கூற்றுக்களுக்கான முகாமையின் பொறுப்பு

v. கணக்காய்வாளரின் பொறுப்பு

vi. ஏனைய அறிக்கையிடல் பொறுப்புகள்

vii. கணக்காய்வாளரின் கையொப்பம்

viii. கணக்காய்வு அறிக்கையின் திகதி

ix. கணக்காய்வாளரின் முகவரி

**(03 புள்ளிகள்)**

(C)

a) **சுய நலம் அச்சுறுத்தல்கள்** - கணக்காய்வாளரின் கணக்காய்வு கிளை நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்கு அவருடைய வாடிக்கையாளரின் காட்சியறை கட்டிடத்தில் அமைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மாதாந்த வாடகையானது சந்தை மதிப்புடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாக காணப்பட்டது. இது சுயநல அச்சுறுத்தலை கணக்காளருக்கு உருவாக்க கூடியது.

**(04 புள்ளிகள்)**

**பரிச்சயம்** - கணக்காய்வு நிறுவனத்தின் மூத்த உறுப்பினர் சீரான் காமென்ட் இன் கணக்காய்வினை கடந்த 12 ஆண்டுகளாக செய்கின்றார். நீண்டகால அல்லது நெருங்கிய உறவு காரணமாக ஒரு தொழில்சார் கணக்காளர் அவர்களின் நலன்களில் அதீத கருணை கொண்டிருத்தல் அல்லது அவர்களின் வேலையில் அதிக ஏற்பினை கொண்டிருத்தல் பரிச்சிய அச்சுறுத்தலை கணக்காளருக்கு உருவாக்க கூடியது.

**மிரட்டுதல் / கட்டாயப்படுத்தல்** - ஒரு தொழில்சார் கணக்காளர் உண்மையான அல்லது உணரப்பட்ட அழுத்தம் காரணமாக செயற்பாடுகளிலிருந்து தடுக்கப்படுவது குறிக்கிறது. தொழில்சார் கணக்காளர் வாடிக்கையாளரின் இடத்தில் கணக்காய்வு நிறுவனத்தை அமைப்பது அழுத்தமான நிலைமைக்கு காரணமாகலாம்.

**(04 புள்ளிகள்)**

b) நோக்கச்சார்பு : பாரபட்சம், உரிமை முரண்பாடு அல்லது மற்றவர்களது தேவையற்ற செல்வாக்கு என்பன காரணமாக அவர்களது தொழில்சார் அல்லது வணிகம்சார் தீர்மானத்தை விட்டுக்கொடுப்பதாக இருத்தல் கூடாது என்ற ஒரு கடப்பாட்டை நோக்கச்சார்பு கோட்பாடு தொழில்சார் கணக்காளர்கள் மீது சுமத்துகிறது.

தொழில்சார் தகுதி: அங்கத்தவர்கள் கொண்டு நடாத்த தேர்ச்சியை கொண்டிராது விடின், ஒப்படைகளை திருப்திகரமாக மேற்கொள்வதற்கு தேர்ச்சி ஆலோசனை மற்றும் உதவிகளை பெற்றுக்கொண்டால் அன்றி கையேற்றலில் இருந்து அல்லது ஒப்படைகளை நீடித்துக்கொள்வதிலிருந்து விலகிக் கொள்ளல் வேண்டும்.

இரு தனித்தனிக் கட்டங்களாக பிரிக்கலாம்.

i. தொழில்சார் தேர்ச்சியின் அடைவு

ii. தொழில்சார் தேர்ச்சியின் பராமரிப்பு

தொழில்சார் நடத்தை: பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கிப்போதல் தொழிலை கிழ் நிலைப்படுத்தும் என கணக்காளரால் தெரிந்திருக்கும் அல்லது தெரிந்திருக்கவேண்டிய எந்தவொரு செயலையும் தடுத்தல் போன்ற கடப்பாட்டை அனைத்து தொழில்சார் கணக்காளர்களின் மீதும் தொழில் சார் நடத்தையை சுமத்துகின்றது.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

aat SRI LANKA

**பிரிவு *A* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*